பொருளடக்கம்



ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 7

1 அறிமுகம் / 9

பகுதி 1: சிறிய உயிரினம் முதல் மனிதன் வரை / 15

டார்வின் கோட்பாட்டின் அடிப்படையும் பின்னணியும் / 17

பகுதி 2: டார்வின் கட்டுக்கதையும் உண்மையும் / 21

1 தொல்லியல் துறை விளக்கங்கள் / 23

2 கரு ஆரம்ப நிலை பற்றி டார்வின் கருத்து / 25

3 குடல்வளை (Appendix) பற்றிய டார்வினின் கருத்து / 26

பகுதி 3: இயற்கைத் தேர்வு [Natural selection] பற்றிய கருத்து / 27

1 அழிக்கும் காரணிகள் மற்றும் வாழவைக்கும் காரணிகள் / 29

2 இயற்கையே தாய் என்ற கொள்கை / 30

3 இயற்கை ஒரு படைப்பாளி அல்ல / 32

4 இயற்கையின் சட்டம் / 35

5 அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் உண்டா? / 40

6 இந்தக் கடவுள்களெல்லாம் யார்? / 43

பகுதி 4: கோட்பாட்டின் கோளாறுகள் / 49

1 பாலியல் விருப்பம் (Sexual selection) / 51

2 முழுமை பெறாத டார்வின் கோட்பாடு / 52

3 அபாயமான பின்விளைவுகள் / 53

4 டார்வின் கோட்பாடு ஏன் பரவியது? / 56

5 குர்ஆனும் டார்வின் கோட்பாடும் / 58

6 ஒரு சோதனை / 65

டார்வின் கோட்பாட்டின் அடிப்படையும் பின்னணியும்

*

1. பழையதிலிருந்து புதியது

டார்வினின் கோட்பாடு முழுக்க முழுக்க அவரது காலம் வரை தோண்டி எடுக்கப்பட்ட தொல்லியல் படிமங்களை, அதாவது, மண்ணில் இருந்து எடுக்கப்பட்ட உயிரினங்களின் எலும்புக் கூடுகளை அடிப்படையாகக்கொண்டவை. மண்ணின் மேல் அடுக்கில் புதிய உயிரினங்களின் எலும்புக் கூடுகளும், தோண்டத் தோண்ட பழங்காலங்களில் வாழ்ந்த உயிரினங்களின் எலும்புக் கூடுகளும் உள்ளன. பூமிக்கு மிக ஆழத்தில் மிகப் பழமையான உயிரினங்களின் எச்சங்கள் இருக்கும். மேலே வரவர புதிய, புதிய உயிரினங்களின் எச்சங்கள் இருக்கும். எனவே, அந்தப் பழைய உயிரினங்களில் இருந்து இந்தப் புதிய உயிரினங்கள் தோன்றியதாக டார்வின் நம்பினார்.

2. ஒரு கருவிலிருந்து எல்லா உயிரினங்களும்

அதேபோல் அனைத்து உயிரினங்களின் உருபெறாத கரு *(embryo)* ஒன்றுபோலத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை டார்வின் வாழ்ந்த காலத்தில் இருந்தது. அதனையே டார்வினும் நம்பினார். (நுண்ணோக்கிகள் இல்லாமல் பார்த்தால் தோற்றத்தில் ஒன்று போல்தான் தோன்றும். நுண்ணோக்கிகள் மூலமே வேறுபாடுகள் தெரியும். உதாரணத்திற்கு மனிதன், மீன், பறவைகளின் உருப்பெறாத கருக்களில் 'பிளவுபட்ட செதில்கள்' போன்ற பகுதி தெரியும். மீனிற்கு அது செதிலாக வளர்ச்சிபெறும். மனிதனுக்குப் பிறப்பதற்கு முன் மறைந்து விடும்.) இது அவர் எழுதியுள்ள கோட்பாட்டிலும் காணமுடிகிறது. எனவேதான், அனைத்து உயிரினங்களும் ஒரே உயிரினத்தில் இருந்து தோன்றியவை என்ற நிலைப்பாட்டிற்கு

1

தொல்லியல் துறை விளக்கங்கள்

*

தொல்லியல் அறிவியல் என்பது முழுமை பெற இன்னும் வெகு தொலைவு உள்ளது. 'நிலம் மற்றும் கடலுக்கு அடியில் தேவையான அளவு தொல்லியல் ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன; அதனால் டார்வின் நடத்திய தொல்லியல் ஆய்வோடு, இனி ஆய்வே நடத்த தேவையில்லை' என யாரும் கூறிவிட முடியாது. தொல்லியல் ஆய்வுகளுக்கானக் கதவுகள் தொடர்ந்து திறந்தே உள்ளன. புதிதாக மண்ணுக்கு அடியில் கிடைக்கும், கண்டுபிடிப்புகள், டார்வின் கோட்பாட்டை குழிதோன்றிப் புதைத்துவிடலாம். அதாவது, அவர் இதுவரை கண்டுபிடித்து வைத்து, கூறியுள்ள கருத்துகளுக்கு மூரண்படலாம்.

அதே நேரம் ஒரு வாதத்திற்காகத் தொல்லியல் கண்டுபிடிப்புகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று கூறினாலும்கூட, டார்வின் கூறும்படியான சிறிய உயிரினத்தில் இருந்து மனிதன் தோன்றினான் என்பதை அவர் நிரூபிக்கவில்லை. அதாவது, அவர் தெரிவித்துள்ள கருத்துகள், அவர் வழங்கியுள்ள உயிரினங்களின் எலும்புகளை வைத்து, அந்தக் காலக்கட்டத்தில், அந்தச் சுற்றுச்சூழலுக்கேற்ப இது போன்ற விலங்குகள் இருந்தன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவ்வளவுதான். டார்வின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் கண்டுபிடிப்புகளின்படி மனிதன் தோன்றி ஆறு இலட்சம் ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டது. ஆனால், நவீன தொல்லியல் கண்டுபிடிப்புகள் மனிதன் பத்து இலட்சம் வருடங்களுக்கு முன்பே இருந்தான் என்கிறது. இதுவே டார்வின் தனது ஆராய்ச்சியை அரைகுறையாகவே முடித்துள்ளார் என்பதை காட்டுகிறது. இதுகுறித்து இன்னும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்

1

அழிக்கும் காரணிகள் மற்றும் வாழவைக்கும் காரணிகள்

*

நிச்சயமாக உயிரினங்களின் இறப்பைத் தீர்மானிக்கும் ஒரு முறையான சட்டம் செயல்பட்டு வருகிறது. பலமான உயிரினங்களாக இருந்தாலும், பலவீனமான உயிரினமாக இருந்தாலும் அவை ஒரு நாள் இறக்கும். ஒவ்வோர் உயிரினத்திற்கும் இறப்பு உண்டு என்பது இறைவன் ஏற்படுத்தி இருக்கும் விதி.

இந்த அழிக்கும் காரணிகள் மட்டும் பூமியில் உள்ள உயிரினங்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துபவை அல்ல. வாழ வைக்கும் காரணிகளும் உள்ளன. சுற்றுச்சூழலும் உயிரினங்களின் இருப்பும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. இந்த இரண்டிற்குள்ளும் ஓர் இணக்கம் உள்ளது. சூரியன், காற்று, மழை, தாவரங்கள், புவி ஈர்ப்பு விசை உள்ளிட்ட இந்த வாழ வைக்கும் காரணிகள் மூலம் இறைவன் உயிரினங்களின் வாழ்விற்குத் தேவையானவற்றை முறையாகக் கொடுத்து வருகின்றான். இந்தக் காரணிகள்தான் மனிதன், விலங்குகள், தாவரங்களின் உயிர் வாழ்தலுக்குத் தேவையானவற்றை ஒருங்கிணைத்து வழங்குகின்றன. அழிக்கும் காரணிகளை மட்டுமே தனது ஆய்விற்கு ஆதாரமாகக் கூறும் டார்வின் இந்த வாழவைக்கும் காரணிகள் பற்றி எதுவும் கூறாமல் புறக்கணித்தது அவரது கோட்பாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (அதாவது, தண்ணீரைப்பற்றி பேசும் டார்வின் அந்தத் தண்ணீர் எப்படி உருவானது என்பது பற்றிச் சொல்லவில்லை.) ஓர் அறிவியல் அறிஞர் ஒரு கோட்பாட்டை உருவாக்கும்போது, அவர் அனைத்துக் காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

3

இயற்கை ஒரு படைப்பாளி அல்ல

*

மனிதனுக்கும் இயற்கைக்கும் ஓர் எளிய ஒப்பீடு. மனிதனால் பார்க்க முடியும். கேட்க முடியும். தெரிந்துகொள்ள முடியும். கற்க முடியும். காரணங்களை அறிய முடியும். அதே நேரம் இந்த எந்தத் தன்மையும் இயற்கைக்கு இல்லை. ஆக, மனிதனை உருவாக்கியதாக இவர்கள் சொல்லும் இயற்கையைவிட மனிதன் எப்படி முற்போக்காக இருக்கிறான்? இதுவே 'இயற்கைதான் படைப்பாளி' என்ற சிந்தனை எவ்வளவு பொய்யானது என்பதை நிரூபிக்கிறது. இறைவன் கூறுகின்றான்:

قُلْ أَتَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَمْلِكُ لَكُمْ ضَرًّا وَلَا نَفْعًا وَاللَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ

'அல்லாஹ்[4]வைத் தவிர்த்து உங்களுக்கு எந்தத் தீங்கையோ, நன்மையோ செய்ய அதிகாரம் இல்லாதவற்றையா நீங்கள் வணங்குகிறீர்கள்?' என்று (நபியே!)[5] நீர் கேளும். அல்லாஹ்

4 அல்லாஹ் (اللّٰه): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். அனைத்தையும் படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

5 நபி (نَبِيٌّ), ரஸூல் (رَسُولٌ): நபி, ரஸூல் ஆகிய இரண்டு சொற்களும் இறைத்தூதர் என்ற கருத்தையே தந்தாலும், இஸ்லாமிய ஆதாரங்களின் பார்வையில் வேறுபாட்டை உணர்த்துகின்றன. அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹ்யி எனும் விசேஷச் செய்தியைப் பெறுபவர் நபி. உதாரணம்: ஹாரூன். ஆனால், வஹ்யியைப் பெறுவது மட்டுமின்றி, ஒரு சமூகத்திடம் அனுப்பப்பட்டு தனிச் சட்டதிட்டங்கள் (ஷரீஅத்) வழங்கப்படுபவர் ரஸூல். உதாரணம்: மூஸா, ஈசா. நபி என்பவர் தமக்கு முந்திய அல்லது சமகால

1

பாலியல் விருப்பம் [Sexual selection]

*

வலுவான உயிரினங்கள் வாழும், பலவீனமானவை அழியும் என்று கூறுவது பரிணாம வளர்ச்சியில் உள்ள தேர்வுக் கொள்கைக்குத் தகுந்த ஆதாரம் அல்ல.

1. கட்டுடலைக்கொண்ட ஒரு விளையாட்டு வீரரின் குழந்தை பிறக்கும்போதே கட்டுடலுடன் பிறப்பதில்லை. அல்லது குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு தானாகக் கட்டுடல் வருவ தில்லை. அவர் தனது ஆற்றலை தனது சந்ததிக்குக் கடத்த முடிவதில்லை. (எதிர்காலத்தில் அவரது குழந்தையும் உடற்பயிற்சி செய்து தந்தையைபோல உடலைக் கட்டுக் கோப்பாக வைக்கலாம். வேறு வழியில்லை.)
2. விஞ்ஞானிகள், அறிஞர்களின் குழந்தைகள் அவர்களைப் போலவே அறிவாளிகளாக இருப்பதில்லை. (ஒரு மருத்து வரின் மகன் படிக்காமல் மருத்துவர் ஆக முடியுமா?)

பரிணாம வளர்ச்சிக் கொள்கை சொல்வதுபோல் ஒருவர் அல்லது ஓர் உயிரினம் தனது வாழும் சூழலுக்கு ஏற்ப பெறப்படும் புதிய பண்புகளை அந்த ஒருவர் அல்லது ஒரு விலங்கு தனது சந்ததிக்குக் கடத்துகிறது என்ற கருத்து நவீன மரபியல் ஆய்வுகளில் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பல ஆய்வுகள் டார்வினின் இந்தக் கொள்கையை மறுக்கின்றன. உயிரினங்களின் மரபணு உட் கூறுகள் தவிர மற்ற எந்த ஒரு தன்மையும் மரபணு மூலம் கடத் தப்படுவதில்லை. முஸ்லிம் ஆண்களுக்கு விருத்த சேதனம் அதா வது, ஆணுறுப்பில் முன் தோல் அகற்றப்படுகிறது. எனவே, விருத்த சேதனம் செய்த ஓர் ஆணிற்குப் பிறக்கும் குழந்தை விருத்த சேதனம் செய்த நிலையில்தான் பிறக்கிறதா? இல்லை! அந்தக் குழந்தை எல்லா மனிதர்களைப் போலவே பிறக்கிறது.

4

டார்வின் கோட்பாடு ஏன் பரவியது?

*

இந்தக் கோட்பாடானது ஒரு சிக்கலான நேரத்தில் வெளியானது. டார்வின் கோட்பாடு ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டில் வெளியானது. அப்போது தேவாலயங்கள் மற்றும் அதன் மாசு படிந்த தவறான சிந்தனைப் பிரிவுகளுக்கும், மதச்சார் பற்ற சக்திகளுக்கும், குறிப்பாக அறிவியல் அறிஞர்களுக்கும் இடையே மோதல் உச்ச கட்டத்தில் இருந்தது. இந்த மோதலில் ஏராளமான அறிவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். பலருக்கு மரணத் தண்டனைகள் வழங்கப்பட்டன.

இதனால், அந்தத் தேவாலயத்தின் மீதான புனித நம்பிக் கைகளைத் தகர்க்க ஐரோப்பியக் கண்டத்திலும், அதற்கு வெளியேயும் அறிவியல் அறிஞர்கள் இந்த டார்வின் கொள் கையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினர். இது ஓர் அறிவியல் கண்டுபிடிப்பாக மக்கள் முன்பு எடுத்துச் சொல்லப்பட்டது. பல காலனி நாடுகளில் இந்த டார்வின் கோட்பாடு பாடப் புத்தகங்களில் இடம்பிடித்தது. இந்தக் கோட்பாடு உண்மை யென்று ஏற்றுக்கொள்ளும் வகையில் சில அறிவியல் சான்றுகள் முன்வைக்கப்பட்டன. ஏராளமான முஸ்லிம் காலனி நாடுகள் குறிவைக்கப்பட்டன.

ஐரோப்பிய நாடுகளில் மதச்சார்பற்ற அறிவியலாளர்களின் இந்தக் கூட்டணியானது, தேவாலயங்கள் உருவாக்கிய சட்டங்களை வெற்றி கொண்டு, பல தலைமுறைகளுக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இந்தக் காலக்கட்டத்தில்தான் மதச்சார்பின்மை மற்றும் அதற்கு ஆதாரமான டார்வின் கோட்பாடு உலகம் முழுவதும் பரவி யது. தேவாலயங்களின் ஆதிக்கத்திற்கு எதிராக மக்களை கிளர்ந்தெழச் செய்ய வேண்டும் என்று நினைத்தவர்கள் இந்த

5

குர்ஆனும் டார்வின் கோட்பாடும்

*

மிக உயர்ந்தவனான இறைவன், எல்லாவற்றையும் அறிந்தவன். அவன் அதனை நம்மிடம் விவரிக்கிறான். அவன் அறிந்த விசயங்கள் அனைத்தையும் மனிதன் அறிந்தவன் அல்ல.

وَاللَّهُ يَعْلَمُ وَأَنْتُمْ لَا تَعْلَمُونَ

நன்மைகளையும் தீங்குகளையும் அல்லாஹ்வே முழுமையாக அறிவான். நீங்கள் அறிய மாட்டீர்கள். (குர்ஆன் 2:216)

أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ

படைப்புகள் அனைத்தையும் படைத்தவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அறியமாட்டானா என்ன? அவன் தன் அடியார்களைக் குறித்து நுட்பமாக அறிந்தவன். அவர்களின் விவகாரங்களை நன்கறிந்தவன். எதுவும் அவனைவிட்டு மறைவாக இல்லை. (குர்ஆன் 67:14)

மனிதன் படைக்கப்பட்டதை எப்படி என்றே அறியாத அவர்கள், எப்படி தாங்கள் இந்த முறையில் படைக்கப்பட்டோம் என்பது குறித்து கேள்வி எழுப்புகின்றனர். மதச் சார்பின்மை கொள்கைதான் இதற்குக் காரணம். இறைவனை வணங்குவதற்கு அல்லாமல் மனிதன் வேறு எந்தக் காரணத்திற் காகவும் படைக்கப்படவில்லை.

مَا أَشْهَدْتُهُمْ خَلْقَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَلَا خَلْقَ أَنْفُسِهِمْ وَمَا كُنْتُ مُتَّخِذَ الْمُضِلِّينَ عَضُدًا

வானங்களையும் பூமியையும் படைத்தபோது நான் அவர்களை அழைக்கவில்லை. மாறாக, அப்போது அவர்கள் இருக்கவில்லை. அவர்களில் சிலரைப் படைத்தபோதுகூட அவர்களை அழைக்கவில்லை. (குர்ஆன் 18:51)